# நம்பிள்ளையின் திருநாவீறு

கோயில் ஆத்தான் ஸ்ரீ.உ.வே. விஜயராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்

நம் ஸித்தாந்தத்தில் அங்கீகரிக்கப்பட்ட தத்வங்கள் மூன்று. அவற்றுள் அசேதநம் எனும் தத்வம் அறிவில்லாதது. மற்ற இரண்டு தத்வங்களும் அறிவுள்ளவை. அதில் ஜீவதத்வம் மூவகையாகப் பிரியும். ஸம்ஸாரத்தில் உழன்று கொண்டிருக்கும் நம்போல்வார் அறிவினால் மிகக் குறைந்தவர்கள். நமது முற்பிறவிகள்பற்றி நாம் ஏதுமறியோம். இப்பிறவியிலும் நமது புலன்களுக்கும் ஞாபக ஶக்திக்கும் விஷயமாவது மிக அல்பமே. ஜீவகோடியில் நம்மைக்காட்டிலும் பன்மடங்கு அறிவுபெற்றவர்கள் நம் பூர்வாசார்யர்கள். இவர்களது ஜ்ஞாநத்தை 'ப்ரமாணாதீந-நிஶ்சயம்' என்று விஶேஷிப்பார்கள். அதாவது ப்ரத்யக்ஷத்தோடன்றி, ஶாஸ்த்ரப்ரமாணத்தை நன்கு கற்று அதனால் உறுதியடைந்தது இப்பெரியோர்களின் அறிவு. இனி, ரிஷிகள் தங்களது தபோபலத்தால் ஒப்பற்ற அறிவை ஸம்பாதிப்பார்கள். போஜன், மாகன், முராரி போன்ற மஹாகவிகள் தங்களது புண்யபலத்தால் பேரறிவைப் பெற்றிருந்தார்கள். காளிதாஸன் போன்ற சில கவிகள் ஒவ்வொரு தேவதையினுடைய கடாக்ஷத்தால் பிறரை விஞ்சிநிற்கும் அறிவைப் பெற்றார்கள். நம்மாழ்வார் போன்ற ஆழ்வார்கள் எம்பெருமானுடைய நிர்ஹேதுகமான கடாக்ஷத்தால் மயர்வறமதிநலம் பெற்றார்கள். ஆழ்வார்களது அறிவு இவ்வுலகத்தில் வேறு எவர்க்கும் கிட்டாது. இதை நித்யமுக்தர்களின் அறிவுக்கு ஒப்பாகச் சொல்லலாம். இது லீலாவிபூதியில் நிலை.

இனி நித்யவிபூதியில் எம்பெருமானுக்கு நித்யரும் முக்தரும் கைங்கர்யம் செய்கிறார்கள். முன்பு அறிவு சுருங்கி இருந்தாலும் மோக்ஷமடைந்தபின்பு அறிவு பூர்ணமான வடிவைப் பெறுவதால் முக்தருக்கு நித்யரோடு அறிவில் வேற்றுமை இல்லை. இனி எம்பெருமானுடைய அறிவு எப்போதுமே விரிந்திருக்கும்; ''யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்'' என்று உபநிஷத் கூறும்; அதாவது எல்லா வஸ்துக்களினுடையவும் ஸ்வரூபத்தையும், ஸ்வபாவங்களையும் அறிபவன் எம்பெருமான். நமது ஹ்ருதயத்திலே நின்று நமது எண்ணங்கள் யாவற்றையும் அறிபவன்; எண்ணங்கள் உற்பத்தியாகும் தருவாயிலேயே அவ்விடத்திலேயே அறியும் தன்மையன். இதையே ஆழ்வார் ''உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறிதி'' என்கிறார். நித்யமுக்தர்க்கும் எம்பெருமானோடு அறிவில் ஸாம்யம் உண்டு. இத்தகைய அறிவு பெற்று அனைத்து ஜீவராஶிகளும் உய்யவேண்டும் என்பதே எம்பெருமானுடைய பேரவா. அதற்காகவே அவன் ஜகத்தை ஸ்ருஷ்டித்து, நமக்குக் கரணகளேபரங்களைத் தந்து, ஶாஸ்த்ரங்களைக் கொடுத்து, ஜ்ஞானிகளையும் தோற்றுவிக்கிறான். இந்த ஜ்ஞாநிகளின் உபதேஶத்தாலும், அவர்தம் வாழ்க்கைநெறியாலும், ஶாஸ்த்ரங்களாலும் நாம் உண்மை அறிவைப் பெறமுடியும்.

ஶாஸ்த்ரங்களில் தலையாயது வேதம். அது இன்னொன்றின் துணையை நாடாமல் தனித்து நிற்கும் ப்ரமாணமாகும். அது வடமொழிமறை என்றும் தென்மொழிமறை என்றும் இருவகை. வடமொழி மறையின் பொருளை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்கு ஶிக்ஷை முதலிய ஆறு அங்கங்கள் உதவுகின்றன. இந்த அங்கங்களைக் கொண்டு தர்க்கம், முதலிய ஶாஸ்த்ரங்களின் உதவியோடு, வேதத்தின் பொருளை மீமாம்ஸை என்னும் ஶாஸ்த்ரம் நிர்ணயிக்கிறது. இன்னமும் ஸந்தேஹமான இடங்களில் தெளிவைப் பெற ஸ்ம்ருதி-இதிஹாஸ-புராணங்களை நாடவேண்டும். அவ்வாறே தமிழ்மறையின் பொருளை உள்ளபடி அறிவதற்கு நம் பூர்வாசார்யர்களின் வ்யாக்யாநங்களையே நாம் அண்டியிருக்கிறோம்.

இவ்வாறு வடமொழிவேதமும், தமிழ்வேதமும், பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளும் நமக்கு நல்லறிவைப் புகட்டுவதில் ஸமாநங்களேயாகிலும் அவற்றிலும் ஏற்றத்தாழ்வை நாம் ஏற்கிறோம். ஸம்ஸ்க்ருதவேதம் ப்ரமாணம் என்றும், த்ராவிடவேதம் ப்ரமாணதரம் என்றும், பூர்வாசார்யரது ஸ்ரீஸூக்திகள் ப்ரமாணதமங்கள் என்றும் யதீந்த்ரமததீபிகை என்னும் க்ரந்தத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த ஏற்றத்தாழ்வுக்குக் காரணம் அந்தந்த நூல்கள் பிறப்பிக்கும் தெளிவும், அதைப் பெறுவதில் உள்ள எளிமையுமே அன்றி வேறல்ல. அதாவது வடமொழி வேதத்தின் உட்பொருளை அறிவதில் உள்ள ஶ்ரமம் திவ்யப்ரபந்தங்களின் பொருளை அறிவதில் இல்லை; அதையும் நாமாக அறிவதைவிட பூர்வர்களின் உரைநூல்களைக் கொண்டு இன்னும் எளிதாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளலாம். ''செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய ஓதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே'' என்று வேதாந்ததேசிகன் பறைசாற்றியதும் இக்காரணங்கொண்டேயாம்.

இத்தகைய உரை ஆசிரியர்களில் தலையானவர் நம்பிள்ளை எனும் ஆசார்யர். திருவாய்மொழிக்கான இவரது உரை ஈடுமுப்பத்தாறாயிரம் என்று புகழ்பெற்று விளங்குகிறது. அன்றாடம் காலக்ஷேபரீதியில் இவ்வாசார்யர் திருவாய்மலர்ந்தருளிய அர்த்தங்களை அந்த அடைவிலேயே தம் திருவுள்ளத்திலே தேக்கி வைத்து, இரவோடு இரவாகப் பட்டோலை கொண்டு நமக்கு உபகரித்தவர் இவரது சீடரான வடக்குத்திருவீதிப்பிள்ளை என்கிற ஆசார்யர். இப்படி மாமேதைகளின் வாயிலாக அவதரித்த ஈடு எனும் ஒப்பற்ற நூலின் மாண்பு இத்தகையது என்று மந்தமதிகளான நம்போல்வரால் அறிதற்பாலதோ?

நம்பிள்ளை தமது ஆசார்யரான நஞ்சீயரிடம் நூறுமுறை திருவாய்மொழியின் அர்த்தத்தைக் கேட்டுணர்ந்தவர். நம்பிள்ளையின் கல்வியறிவு எப்படிப்பட்டது என்று அவரது சீடருள் முக்யமானவரான பெரியவாச்சான்பிள்ளை எனும் ஆசாரியரின் திருவாக்கால் ஓரளவு அறியலாம். பெரியதிருமொழியில் ''ஏழை ஏதலன்'' என்கிற பதிகத்தில் ''ஓதுவாய்மையும்'' என்கிற பாட்டின் வ்யாக்யாநத்தில் உள்ள வரிகள் - 'முற்பட த்வயத்தைக் கேட்டு, இதிஹாஸபுராணங்களையும் அதிகரித்து, பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாயமீமாம்ஸைகளும் அதிகரித்து, போதுபோக்கும் அருளிச்செயலிலேயாம்படி பிள்ளையைப்போலே அதிகரிப்பிக்க வல்லவனையிறே ''ஒருத்தன்'' என்பது' என்று. ஸ்ரீக்ருஷ்ணனுக்குக் கல்வி கற்பித்த ஸாந்தீபனிக்கு ஒப்பாக நம்பிள்ளையைக் குறித்தது இங்கு உற்று நோக்கத்தக்கது. இப்படி முறையாகக் கல்வி பயின்று, ஆசார்யரின் அருளையும் பூர்ணமாகப் பெற்று, தாம் பயின்றதைப் பிறரும்

அறியவேண்டும் என்கிற பெரும் கருணைகொண்ட நம்பிள்ளையின் திருவாக்கில் நாமகள் நர்த்தநமாடுகிறாள் என்றால் மிகையாகாது. திறம்பட உரைத்தல் என்னும் வகையிற்சேர்ந்த சாடூக்திகள் ஈட்டில் மலிந்து கிடக்கின்றன. அரும்பதவுரைகாரர்கள் ஆங்காங்கே இந்த நுணுக்கங்களைக் காட்டியுள்ளனர். ஆழ்வாருடைய பாசுரங்களின் அர்த்தத்தையும், ஆழ்வார் திருவுள்ளத்திலோடும் பாவத்தையும் விளக்குவதற்கு இவர் கையாளும் முறையே அத்விதீயமானது. மகாகவிகளின் சொற்களும், சொல்லாட்சியும் இவரது திருவாக்கில் நிறைந்திருக்கும். பொருள் நயம், சொல்நயம், ஆகியவற்றால் நிரம்பின இவரது ஸ்ரீஸூக்தியில் ஓர் அம்ஶத்தை மட்டும் நாம் இங்கு அநுபவத்தில் கொள்வோம்.

திருவாய்மொழி ஏழாம்பத்து ஐந்தாம் திருவாய்மொழியில் பதினோராம்பாட்டு வ்யாக்யாநத்தில் - 'அர்ஜுநன்தான் எம்பெருமானைப் பெற்றானோ? இல்லையோ?' என்று நம்பிள்ளை ஜீயரைக் கேட்க, 'உமக்கு அதுகொண்டு கார்யமென்? இது சொன்னவன் ஸர்வஸாதாரணனாகில், பகவதுக்தி என்னுமிடம் நிஶ்சிதமாகில், தந்தாமுடைய கர்மாநுகூலமாகவும், ருச்யநுகூலமாகவும் பெறுகிறார்கள். பெற்றவர்களை ஆராய்ந்து பார்த்து அத்தாலேயன்றே நாம் பற்றப் பார்க்கிறது' என்று அருளிச்செய்தார்.

அர்ஜுநன் மோக்ஷம் பெற்றானா? இல்லையா? என்பது நம்பிள்ளையின் கேள்வி. அதற்கு நஞ்சீயர் அளித்த விடையாவது - 'அதை ஆராய்ந்து உமக்கென்ன பயன்? அவரவர்கள் தமது கர்மத்தின் படியும், ருசியின்படியும் மோக்ஷத்தைப் பெறுகிறார்கள் (அல்லது இழக்கிறார்கள்). மோக்ஷம் பெற்றவர்களைப் பற்றி விசாரித்து நாம் எம்பெருமானைப் பற்றுவதில்லையே' என்று. இவ்விடத்தில் நம்பிள்ளையின் ஸ்ரீஸூக்தி மிகவும் கம்பீரமானது. ''இது சொன்னவன் ஸர்வஸாதாரணனாகில், பகவதுக்தி என்னுமிடத்தில் நிஶ்சிதமாகில்...'' என்றன்றோ வாக்யம் அமைந்துள்ளது. அதாவது 'அர்ஜுநனுக்கு கீதோபதேஶம் செய்தவன் அனைவர்க்கும் பொதுவானவனாகில், அவ்வார்த்தை பகவானுடையது என்பதும் உறுதியாகில்...' என்று பொருள்படும். இவ்விடத்தில் 'ஆகில்' என்னும் பதம் ஒரு ஸந்தேஹம் இருப்பதுபோல் காட்டுகிறது. 'ஆகில்' என்று சொல்லும்போதே, 'ஆகாவிடில் என்ன?' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

இராமாநுசநூற்றந்தாதியில் ''கையில் கனியென்ன'' என்கிற பாட்டிலே ''இவ்வருள் நீ செய்யில் தரிப்பன்'' என்றுள்ளது. அதாவது - 'இந்த அருளை எனக்கு நீ செய்தால் நான் உயிர் தரிப்பேன்' என்று பொருள். 'நீ செய்யாவிடில் உடனே முடிவேன்' என்பது அமுதனாரின் திருவுள்ளம். இந்த அர்த்தம் நேராகப் பாட்டில் கூறப்படவில்லையேயாயினும், ''செய்யில்'' என்கிற சொல்லின் அர்த்தபலத்தால் கிடைக்கிறது. இவ்வாறான 'ஆகில்' என்கிற பதப்ரயோகத்தை ஸம்ஸ்கிருதத்தில் 'யதி' ஶப்தகடிதம் 'यदि शब्दगटितम्' என்பர். 'ஆகில்' என்பது ஒரு பக்ஷமும், 'ஆகாவிடில்' என்பது இன்னொரு பக்ஷமுமாக இதற்கு இரண்டு பக்ஷங்களுண்டு. அவ்வாறு இரண்டு பக்ஷங்களை நம்பிள்ளை கூறவிரும்புகிறாரா என்று பார்க்க வேண்டும்.

மேலும் ஒரு இடத்தையும் காண்போம். திருவாய்மொழி ஏழாம்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி ப்ரவேஶத்திலே ஈட்டின் ஸூக்தி:- இஸ்ஸம்ஸாரத்திலே பொருந்தாதிருக்கிற

என்னை இங்கு வைத்ததுக்கு ஹேதுவென்'' என்ன, ''நம்மை இதுக்கு ஒரு ஹேது நிர்ப்பந்தித்துக் கேட்கவேணுமோ? கண்டதெல்லாவற்றிலும் நாக்குநீட்டி அவற்றிலே ருசி பண்ணிப் போந்தீராகில், அதுக்கடியான கர்மம் கிடந்ததாகில், வாஸநாருசி கிடந்ததாகில், அவற்றாலே இருந்தாலாகாதோ?... '' என்று. இங்கும் 'ஆகில்' என்கிற 'யதி'ஶப்தகடிதமான ப்ரயோகம் காண்கிறோம். முந்தைய நாட்களில் ஆழ்வாருக்கு விஷயாந்தரங்களிலே ருசி இருந்தபடியாலே அப்போது அநுக்ரஹம் செய்யவில்லை என்பதே எம்பெருமானின் விடை. இதைச்சொல்லும்போது 'இருந்ததாகில்' என்று ஓர் ஐயப்பாடு தோன்றக் கூறவேண்டிய நிர்ப்பந்தமென்ன? ஸம்ஸ்க்ருதமஹாகாவ்யங்களைக் கொண்டு பெரியோர்கள் இதற்குக் கூறும் ஸமாதாநத்தை மேலே காண்போம்.

காளிதாஸனின் அபிஜ்ஞாநஶாகுந்தலம் என்னும் நாடகத்தின் துவக்கத்தில் மங்களாசரணம் முடிந்தவுடன் ஒரு நடிகன் திரைக்குள்ளே இருக்கும் ஒப்பனைக்கூடத்தை நோக்கிக் கூறுவதாக அமைந்துள்ள வாக்யம் :- ''ஆர்யே! யதி நேபத்யவிதாநம் அவஸிதம், தர்ஹி இதஸ்தாவதாகம்யதாம்'' (அலங்காரம் முதலானவை முடிந்துவிட்டால் இங்கு வரலாமே) - ஆடை அணிகலன் முதலான ஒப்பனைகள் முடிந்தபிறகே மங்களஶ்லோகம் பாடப்படுகிறது. எனவே 'முடிந்துவிட்டால்' என்று இங்கே சொன்னதற்கு 'முடிந்துவிட்டதே' என்று பொருள் கூறி இருக்கிறார்கள் உரையாசிரியர்கள். இதற்கு ஸம்வாதமாக இன்னொரு மஹாகவியின் ப்ரயோகத்தையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். மஹாகவி போஜராஜனின் சம்பூராமாயணத்தில் ஆரம்பத்தில் இரண்டாவது மங்களஶ்லோகம் பின்வருமாறு :-

உச்சைர்கதி: ஜகதி ஸித்யதி தர்மதஶ்சேத்
தஸ்ய ப்ரமா ச வசஸை: க்ருதகேதரைஶ்சேத் ।
தேஷாம் ப்ரகாஶந தஶாச மஹீ ஸுரைஶ்சேத்
தாந் அந்தரேண நிமதேத் க்வநு மத் ப்ரணாம: ॥

(உயர்ந்த கதியை நாம் அடைவது இவ்வுலகில் நாம் செய்யும் தர்மங்களாலே என்பது உண்மையாகில்; அந்த தர்மங்களைப் பற்றி நாம் அறிந்துகொள்வது மனிதனால் இயற்றப்படாத (அபௌருஷேயமான) வேதங்களாலே என்பது உண்மையாகில்; அந்த வேதங்கள் உலகில் பரவி நிலைபெற்றிருப்பது நிலத்தேவர் என்று போற்றப்படும் அந்தணர்களாலே என்பது உண்மையாகில், அவர்களைவிட்டு எனது ப்ரணாமங்கள் வேறு யாரிடம் சென்றுசேரும்).

ஸ்வர்க்கம் முதலான உயர்ந்த ஸ்தாநங்கள் ஜ்யோதிஷ்டோமம் முதலான தர்மங்களால் ஏற்படும் என்பது யாவரும் அறிந்ததே. அவ்வாறே, மேற்சொன்ன பலன்களுக்கு யஜ்ஞம் முதலானவை ஸாதநம் என்பதை ''ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்ககாமோ யஜேத'' என்பனபோன்ற வேதவாக்யங்களே நமக்கு அறிவிக்கின்றன என்பதும் நாம் ஒப்புக்கொள்வதேயாகும். அந்த வேதங்களை 'சந்தி வேள்ளி சடங்கு நான்மறை ஓதி ஓதுவித்து ஆதியாய் வரும் அந்தணர்'' என்று திருமங்கை ஆழ்வார் அநுபவித்தபடி அத்யயநம் முதலானவற்றால் வெளிப்படுத்துவது அந்தணர்களே என்பதும் அனைவரும் அறிந்ததே. ஆக இப்படி ஸர்வஸம்மதமான விஷயங்களிலும் 'ஆகில்' என்கிற ப்ரயோகம் செய்திருப்பதால், அங்கு ஐயப்பாட்டுக்கு இடமேயில்லை. 'ஆகில்' என்பதற்கு உறுதிப்பாடே பொருள். இதையே வடமொழி

உரையாசிரியர்கள் 'அஸந்திக்தஸ்தலே ஸந்திக்தவதாபாஷணம் த்ருடீகரணார்த்தம்' என்பர். அதாவது ஸந்தேஹமற்ற இடங்களில் ஸந்தேஹம் உள்ளதுபோல் பேசுவது அந்த இடத்தில் உறுதியேயன்றி ஸந்தேஹமில்லை என்று காட்டுவதற்காகவே. ஆக, 'உயர்ந்த கதியை நாம் அடைவது இவ்வுலகில் நாம் செய்யும் தர்மங்களாலே என்பது உண்மையாகில் என்றால், 'உயர்ந்த கதி நாம் செய்யும் தர்மங்களாலே ஸித்தித்தே தீரும்' என்று அர்த்தம்.

இந்த ரீதியில் நாம் நம்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியை ஆராயும்போது நமக்கு அர்த்தம் நன்கு புலப்படும். ஈட்டிலுள்ள மேல் வாக்கியங்களோடும் இவ்வாறான அர்த்தமே நன்கு பொருந்தும். எம்பெருமானின் ஸமாதாநம் இப்படி அமையும் - 'வாரீர் ஆழ்வீர் - உமக்கு நம்மோடு அத்வேஷம் ஆபிமுக்யம் முதலானது பிறந்தது இப்போதன்றோ? கீழ் நாள்களில் புலன்கள் சென்ற இடமெல்லாம் நீர் திரியவிடவில்லையா? அதற்கு அநாதியான கர்மம் இருக்கவில்லையா? அக்கர்மத்தின் கார்யமான ருசி, வாஸனை முதலானவை இல்லையா? இப்படி உம்மை நாம் வீஷயீகரிக்காமல் வைத்ததுக்கு இத்தனை காரணங்கள் இருந்ததை அறிந்தும் அதை நம் வாயால் சொல்லும்படி நிர்ப்பந்திக்கவேணுமோ?'

ஸகலஶாஸ்த்ரங்களிலும் கரைகண்டவர்களான பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை நாம் குருமுகமாகக் கற்றாலல்லது பொருள் விளங்காது என்பது திண்ணம். பெரியோர்களிடம் கேட்டதைக் கேட்டபடியே எழுதினேனத்தனை. வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளிலும் தேர்ச்சி பெற்றாலொழிய நம்பூர்வாசாரியரின் ஸ்ரீஸூக்திகளை அநுபவிக்கமுடியுமோ? அதிலும் இலக்கியத்தின் சுவடறியாமல் தர்க்க வ்யாகரணம் முதலிய ஶாஸ்த்ரங்களை மட்டும் பயின்றவர்களுக்கு இத்தகைய நுணுக்கங்களை அனுபவிக்கப்போமோ?

நம்பிள்ளை திருவடிகளே ஶரணம்